## எம்.ஜி.ஆரின் அண்ணாயிசம், இப்போது எடப்பாடியால் அமித்ஷா இசம் ஆகிவிட்டது!

# தமிழ்நாடு காப்பாற்றப்பட தி.மு.க.வின் நல்லாட்சி தொடர வேண்டும்!

### ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு பொதுக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி, சிறப்புரை!

**கன்னியாகுமரி, செப். 23 -**

**கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.கழகத்தின் சார்பில் ஒருங்கிணைக்கப்பட்ட, ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கத்தின் “தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்” தீர்மான ஏற்பு பொதுக்கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் “தமிழ்நாடு காப்பாற்றப்பட தி.மு.க.வின் நல்லாட்சி தொடர வேண்டும்” என்று குறிப்பிட்டார்.**

இக்கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசியதாவது:

”ஓரணியிலே திரண்டிருக்கக் கூடிய இந்தக் கூட்டத்தைப் பார்க்கும்போது பொதுக்கூட்டமாக ஏற்பாடு செய்வேன் என்று கூறிவிட்டு நமது மாவட்டச் செயலாளர் ஒரு மாநாட்டையே ஏற்பாடு செய்திருக்கிறார்.

வரக் கூடிய வழியிலெல்லாம் இந்த கூட்டத்துக்கு வரும் சகோதர சகோதரிகளை எல்லாம் பார்த்துக் கொண்டுதான் வந்தோம். இவ்வளவு பெரிய கூட்டமாக இருந்தாலும், ஆம்புலன்ஸ் வந்த பொழுது திராவிட முன்னேற்ற கழக உடன்பிறப்புகள் அதற்கும் வழி விட்டோம். அதற்குக் காரணம் இந்த 108 கொண்டு வந்தது நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

உயிரின் மதிப்பை அறிந்தவர்கள் நாம். எல்லோரையும் சமமாக நினைக்க தெரிந்தவர்கள் நாம்.

**ஆம்புலன்ஸ்ஸை விரட்டுபவர்கள்!**

கூட்டத்தில் ஆம்புலன்ஸ் வந்தால் அந்த ஆம்புலன்சில் வருபவர்கள் எல்லாம் விரட்டிக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள். இவர்களெல்லாம் தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வர வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எப்படிப்பட்ட மனிதர்களை நாம் எதிர் அணியிலே பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் இருக்க முடியாது.

மனிதர்கள் மீது மனித உயிர்கள் மீது அக்கறையே இல்லாதவர்களைத்தான் நாம் எதிர்த்து கொண்டிருக்கிறோம்.

அவர்கள் கூட்டணி வைத்திருப்பதும்... மனிதர்களின் உரிமை, மாநில உரிமை, நாட்டின் உரிமை, ஜனநாயக உரிமை அனைத்தையும் குழிதோண்டி புதைத்து விட வேண்டும் என்று நினைக்கிற பாஜகவோடு கூட்டணி வைத்திருக்கிறார்கள்.

துரோகம், மனித உரிமை பறிப்பு என இரண்டும் சேர்ந்து நமக்கு எதிரணியிலே அணிவகுத்து இருக்கிறது.

அதனால்தான் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய நமது கடமை என்ன என்று நினைவுபடுத்தக்கூடிய வகையிலே உறுதிமொழியோடு இந்த கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

நமது முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் ஒவ்வொரு கூட்டத்திலும் அந்த உறுதி மொழியை மறுபடி மறுபடி மக்களுக்கு நினைவுபடுத்த வேண்டும் என்று தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

இந்த மண் ஒவ்வொரு காலகட்டத்திலும் தன்னுடைய உரிமைகளுக்காக மக்களுடைய உரிமைகளுக்காக போராடக் கூடிய மண். அப்படிப்பட்ட இந்த மண்ணிலேயே என்னுடைய முதல் கூட்டத்தில் பேசுவதற்காக நான் பெருமை அடைகிறேன்.

தோல் சீலை போராட்டம் தொடங்கி தமிழ்நாட்டின் எல்லை போராட்டம் என போராட்ட மண் இந்த மண். தமிழ்நாடு முழுதும் மொழி போராட்டம் நடந்து கொண்டிருந்த நிலையிலே தமிழ்நாட்டின் எல்லைக்காகவும் போராட்டம் நடத்திய மண் இந்த மண்.

அந்தப் போராட்ட தியாகிகளை 1974 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் தான் மொழிப் போர் தியாகிகளுக்கு இணையாக தியாகிகள் என்று அங்கீகரித்தார். இப்படி எத்தனையோ போராட்ட வரலாறுகளை கொண்டிருக்கக் கூடிய மண் இந்த மண்.

இந்த மண்ணிலே நின்று கொண்டு இன்று தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் என்று சொல்லக்கூடிய வகையிலே இந்த கூட்டத்தை நடத்துவதிலே நான் பெருமை, மகிழ்ச்சி, உவகை அடைகிறேன்.

**பா.ஜ.க. ஆட்சியில் பறிபோகும் தமிழ்நாட்டின் உரிமைகள்!**

பா.ஜ.க. ஆட்சியிலே தமிழ்நாட்டின் உரிமைகள் எந்த அளவுக்கு தொடர்ந்து பறிபோகின்றன என்பதை உணர்ந்திருக்கிறோம். நம்முடைய மாணவர்கள் பிள்ளைகள் படிப்பதற்கு நமக்கு தரவேண்டிய கல்வி நிதியை தர மாட்டார்கள். இந்தியாவிலேயே கல்லூரிக்கு போகும் மாணவர்கள் அதிகமாக இருக்கும் மாநிலங்களில் முதல் இரண்டு இடங்களுக்குள் வருவது தமிழ்நாடு.

புதிய கல்விக் கொள்கையில் கூட இன்னும் 30 வருடம் கழித்து தான் உயர்கல்வி செலவோரின் சராசரி 50 சதவீதம் என்று தொடுவார்களாம்.

அதை என்றோ நாம் கடந்து விட்டோம். ஆனால் இந்த நிலை வருவதற்கு எத்தனை போராட்டங்கள், நீதிக்கட்சி தொடங்கி திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் வரை எத்தனை போராட்டங்கள்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தான் பெண்கள் கல்விக்காக, பெண்கள் திருமண நிதி உதவி திட்டத்தை தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்தார்கள்.

அதுமட்டுமில்லாமல் முதல் தலைமுறை மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப், கட்டணமில்லா கல்வி என்று எத்தனையோ திட்டங்கள்.





ஒவ்வொரு சின்ன சின்ன ஊரிலும் கல்லூரிகளை தொடங்கியது திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே தலைவர் கலைஞரின் ஆட்சியிலே. இத்தனை முன்னெடுப்புகளுக்கு பிறகு தான் இந்த சாதனையை நாம் தொட்டிருக்கிறோம்.

இதையெல்லாம் பாழடிக்கக் கூடிய வகையிலே இல்லாமல் செய்யக்கூடிய வகையிலே ஒன்றியத்தில் இருக்கக்கூடிய பி.ஜே.பி. ஆட்சி, ‘நீ இந்தி படி நாங்கள் சொல்லக்கூடிய விதத்தில் தான் நீங்கள் பள்ளிக் கூடங்களை நடத்த வேண்டும், எந்த குலக்கல்வியை எதிர்த்து போரிட்டு வெற்றி பெற்றோமோ அதே கல்வியை மீண்டும் கொண்டு வர வேண்டும்.. இதையெல்லாம் ஏற்றுக் கொண்டால்தான் 5000 கோடி ரூபாய் உங்கள் மாணவர்களுக்கு நான் தருவேன்’ என்று சொல்கிறார்கள்.

**பா.ஜ.க. அரசின் மொழி திணிப்பு!**

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு அரசு மருத்துவக் கல்லூரியை உருவாக்க வேண்டும் என்பது தலைவர் கலைஞரின் கனவு. தனியார் கல்லூரிகளுக்கு எல்லோராலும் போக முடியாது. அதை நாசம் செய்யக்கூடிய வகையிலே நீட் தேர்வுகளைக் கொண்டு வந்து நம் மீது திணித்தனர்.

ஒரு காலகட்டத்தில் சமஸ்கிருதம் படித்தால்தான் நீங்கள் மருத்துவராக முடியும்... ஏன் சமஸ்கிருதம் படிக்க வேண்டும் என்று சொன்னார்கள்? இது கன்னியாகுமரி காரர்களுக்கு தெரியும் என்று நினைக்கிறேன். நீங்கள் தானே தமிழ்நாடு முழுவதும் இருக்கிறவர்களுக்கு பாடம் எடுத்துக் கொண்டிருக்க கூடியவர்கள்.

யார் சமஸ்கிருதம் படிப்பார்கள்? நீங்கள் படிப்பீர்களா? உங்களுக்கு சொல்லித் தருவார்களா? இல்லை. அதை படிப்பவர்கள் மட்டும்தான் மருத்துவம் படிக்க வேண்டும் என்பதற்காகதான் அந்த விதி. சமஸ்கிருதத்தில் மருந்தா எழுதப் போகிறார்கள்?

அதை உடைத்து மாற்றியது திராவிட இயக்கம். இன்று எல்லோரும் மருத்துவர்கள் ஆகக்கூடிய வகையிலே ஒரு நிலையை உருவாக்கிய பிறகு, அதை அழிக்க வேண்டும் என்று நினைத்து நீட் தேர்வுகளை கொண்டு வந்திருக்க கூடியது ஒன்றியத்தில் இருக்கக் கூடிய பாஜக அரசு.

ஜிஎஸ்டியை கொண்டுவந்து தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய நிதி எல்லாம் அவர்கள் வாரிக் கொண்டு சென்று விடுகிறார்கள். தமிழ்நாட்டினுடைய உள்நாட்டு உற்பத்தி 9.2%.

ஆனால் அதிலிருந்து நமக்கு அவர்கள் தருகிற வரி பகிர்வு 4 சதவிகிதம் தான். நம்மிடமிருந்து வாங்கிக் கொள்வது கிட்டத்தட்ட 10%. ஆனால் நமக்கு வழங்குவது வெறும் நான்கு சதவீதம் மட்டுமே.

இப்படி வரியையும் வாங்கிக் கொண்டு... நாம் எதற்காக நிதி கேட்டாலும் கொடுக்காமல், நம் மீது மொழியை திணிக்க கூடிய அத்தனை வழி வகைகளையும் கையாண்டு கொண்டிருக்கிறார்கள்.

சமீபத்தில் கூட நாங்கள் யார் மீதும் எந்த மொழியையும் திணிக்கவில்லை என்று ஒன்றிய அமைச்சர் அமித்ஷா கூறுகிறார். அதே மேடையில் அவரே, அறிவியலை இந்தியில் படிக்க வேண்டும் மற்ற முக்கியமான பாடங்களை இந்தியில் படிக்க வேண்டும் என்று கூறுகிறார். இவ்வாறு மொழியை திணிக்க கூடிய ஒரு ஆட்சி.

நாடாளுமன்ற உறுப்பினர்களான நாங்கள் ஒன்றிய அமைச்சர்களுக்கு ஆங்கிலத்தில் கடிதம் எழுதினால் எங்களுக்கு பதில் வருவது இந்தி மொழியில்.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய என்னுடைய தொகுதியின் மக்கள் பிரச்சனைகள் பற்றி நான் எழுதுகிறேன். எனக்கு இந்தி தெரியாது, படிக்கத் தெரியாது, பேசினால் புரியாது. எனக்கு தேவையும் இல்லை. உலகத்திலே இருக்கின்ற அத்தனை விஷயங்களையும் என்னால் தமிழிலும் படிக்க முடியும் அதே நேரத்தில் ஆங்கிலத்திலும் படிக்க முடியும்.

ஆங்கிலமும் தமிழும் படிக்க தெரிந்ததால்தான் இன்று சிலிக்கான் வேலி முழுவதும் இருக்கக்கூடியவர்கள் தமிழர்களாக அங்கே கோலோச்சிக் கொண்டிருக்கிறார்கள். இந்தி படித்ததால் அல்ல.

இப்படிப்பட்ட தமிழ்நாட்டில் இருந்து எனக்கு இந்தி தெரியாது. என்னுடைய தொகுதி மக்களின் பிரச்சினைகளை ஆங்கிலத்திலே கடிதமாக எழுதுகிறேன். ஆனால் பதில் வருவது இந்தியில். ஒரு மொழி மீது இருக்கக்கூடிய அக்கறை இந்த நாட்டு மக்கள் மீது அவர்களுக்கு இல்லை.

இதையெல்லாம் எதிர்த்து கேள்வி கேட்டால் நீங்கள் நக்சல். அர்பன் நக்சல். இந்தியாவுக்கு எதிராக செயல்படக்கூடியவர்கள்.

ஆனால் உண்மையிலேயே நாட்டுக்கு எதிராக செயல்படக்கூடியது ஆர்.எஸ். எஸ். தான். பிரதமர் கொடியேற்றி விட்டு அதே மேடையிலே ஆர் எஸ் எஸ் இன் பெருமைகளை எல்லாம் பேசினார். ஒரே ஒரு பெருமையை மட்டும் விட்டுவிட்டார்.

சுதந்திர இந்தியாவில் முதன்முதலாக நாடாளுமன்றத்தை தாக்க சென்றது ஆர்எஸ்எஸ் தான். பசுவதை தடுப்புச் சட்டத்தை கொண்டுவர வேண்டும் என்று ஆர் எஸ் எஸ் ஒரு முன்னெடுப்பை எடுக்கிறது. கோரிக்கையை முன் வைக்கிறது.

பெருந்தலைவர் காமராஜர் அதை மிகக் கடுமையாக எதிர்க்கிறார். அந்த ஆர் எஸ் எஸ் இயக்கங்கள் எல்லாம் இணைந்து, 1966 நவம்பர் 7ஆம் தேதி டெல்லியில் ஒரு பேரணியாக வந்து நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டு தாக்க முற்படுகிறார்கள். இந்தியாவிலேயே முதல்முறையாக நாடாளுமன்றத்தை தாக்க முனைந்து தாக்க முற்பட்டது ஆர்எஸ்எஸ் தான். பாகிஸ்தானில் இருந்து யாரும் வந்து தாக்கவில்லை. வேறு நாடுகளில் இருந்து யாரும் வந்து தாக்கவில்லை. நக்சலைட் என்று சொல்கிறார்களே அவர்கள் வந்து தாக்கவில்லை.

எந்த ஆர் எஸ் எஸ் இயக்கத்தை பிரதமர் மோடி புகழ்ந்து பேசுகிறாரோ அந்த இயக்கம் தான் இந்தியாவில் முதல் முறையாக நாடாளுமன்றத்தை தாக்கியது.

அவர்கள் தான் அன்று காங்கிரஸில் இருந்த அத்தனை தலைவர்களின் வீடுகளையும் முற்றுகை இட்டார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களை எல்லாம் தாக்க முற்பட்டார்கள். பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் வீட்டுக்கு தீ வைத்து அவரை தாக்க முற்பட்டார்கள். அந்தத் தீயில் இருந்து அவரை காப்பாற்றுவதே பெரும்பாடாக ஆன ஒரு சூழலை உருவாக்கியவர்கள் அவர்கள்.

இன்று தேசத்தைப் பற்றி தேசபக்தியைப் பற்றி நாட்டைப் பற்றி நாடாளுமன்றத்தை பற்றி பேசுவதற்கு அவர்களுக்கு எந்த தகுதியும் கிடையாது. இதை அவர்களும் புரிந்து கொள்ள வேண்டும், நாமும் புரிந்து கொள்ள வேண்டும்.

இப்படிப்பட்டவர்கள் தான் இன்று இந்த நாட்டிலே ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் கையில் ஆட்சியை கொடுத்ததால் தான், அவர்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை.

**தேர்தல் ஆணையத்தை கையில் வைத்திருக்கும் பா.ஜ.க.!**

தேர்தல் ஆணையத்தை தன் கையிலே வைத்துக்கொண்டு தேர்தல் ஆணையத்தின் வழியாகவே வெற்றிகளை பெற்றுக் கொண்டிருக்கக் கூடியவர்கள். இதுவரைக்கும் எந்த ஆட்சி வந்தாலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி இங்கே பதவிக்கு வர வேண்டும். நாம் அவர்களின் கொள்கைகளை ஏற்றுக் கொள்கிறோமோ இல்லையோ மக்கள் யாரை தேர்ந்தெடுக்கிறார்கள்... நாம் அடிக்கடி சொல்லுவோமே மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று. மக்கள் முடிவெடுத்துவிட்டால் அதுதான் இறுதியான முடிவு. யார் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதை மக்கள் முடிவு செய்ய வேண்டும்.

ஆனால் இப்போது இருக்கக்கூடிய ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி, மற்ற மாநிலங்களில் இருக்கக்கூடிய பாஜக ஆட்சிகளை மக்கள் ஓட்டு போட்டு தேர்ந்தெடுத்தார்களா? அல்லது தேர்தல் கமிஷனை கையிலே வைத்துக்கொண்டு ஆட்சியைப் பிடித்தார்களா என்று தெரியவில்லை.

எத்தனையோ மாநிலங்களிலே திடீரென ஒரு தொகுதியை எடுத்துக் கொண்டீர்கள் என்றால் ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான ஓட்டுகள் அங்கே காணாமல் போகின்றன. புதிதாக வாக்குகள் கொண்டு வந்து சேர்க்கப்படுகின்றன. குறிப்பாக சிறுபான்மை மக்கள், தலித் மக்கள் இருக்கக்கூடிய, முக்கியமாக பெண்கள் வாக்களிக்கக்கூடிய பகுதிகளில் எல்லாம் வாக்குகள் காணாமல் போய்விடுகின்றன.

பீகார் மாநிலத்தில் இன்று எஸ்.ஐ.ஆர். என்ற திட்டத்தை கொண்டு கொண்டு வந்திருக்கிறார்கள்.

எஸ் ஐ ஆர் என்பதற்கு ஸ்பெஷல் இன்டென்சிவ் ரிவிஷன் என்பதை மாற்றிவிட்டு, ஷா இன்டென்ஷன் ரிவிஷன் என்று. ஏனென்றால் அமித்ஷா எதை நினைக்கிறாரோ அதை செய்யக்கூடிய ரிவிஷனாக அது மாறிவிட்டிருக்கிறது.

பீகாரில் வருகிற நவம்பர் மாதம் தேர்தல் வரப்போகிறது. அங்கே ஆயிரக்கணக்கான வாக்குகள் ஒவ்வொரு தொகுதிகளிலும் காணாமல் போயிருக்கின்றன. இஸ்லாமிய மக்கள் வாழக்கூடிய தொகுதிகள், கிறிஸ்தவ மக்கள் வாழக்கூடிய தொகுதிகள், யார் யாரெல்லாம் அவர்களுக்கு ஓட்டு போட மாட்டார்களோ அந்த தொகுதிகளில் இருக்கும் வாக்குகள் எல்லாம் காணவில்லை.

**உரிமையை குழித்தோண்டி புதைக்கும் செயல்!**

இது தேர்தல் கமிஷனை கையில் வைத்துக் கொண்டு இந்த நாட்டின் ஜனநாயகத்தை மக்களின் உரிமையை குழி தோண்டி புதைக்க கூடிய செயல் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நம்முடைய அடிப்படை உரிமை என்ன? வாக்குரிமை. அதை நம்மிடமிருந்து யாரும் பறித்து விடக்கூடாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆனால் அந்த அடிப்படை உரிமையை நம்மிடம் இருந்து பறிக்கும் செயலை தான் பா.ஜ.க. ஒவ்வொரு இடத்திலும் செய்து கொண்டிருக்கிறது.

மிகப்பெரிய உதாரணம்... ஒரு பகுதியில் ஒரே வீட்டில் 120 பேரை புதிதாக வாக்காளர் பட்டியலில் சேர்த்து இருக்கிறார்கள். 120 பேரை ஒரே வீட்டில் வாக்காளர்களாக சேர்த்திருக்கிறார்களே... அது எவ்வளவு பெரிய பங்களாவாக இருக்கும் என்பதற்காக அதை பார்ப்பதற்கு போயிருக்கிறார்கள்.

இந்த பட்டியலை எடுத்துக்கொண்டு காங்கிரஸிலிருந்து அந்த வீட்டுக்கு சென்று இருக்கிறார்கள். அங்கே போய் பார்க்கும்போது அந்த 120 பேர் இருக்கக்கூடிய இடம் என்பது ஒரே ஒரு ரூம். ஒரே ஒரு அறை.

அதில் இரண்டு பேர் தான் இருக்கிறார்கள். அவர்களுக்கும் ஓட்டு இல்லையாம். ஆனால் அந்த முகவரியில் இருந்து 120 பேர் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டு இருக்கிறார்கள். ஒரு முகவரியில் ஒரு வீட்டில் ஒரு அறையை வைத்து இவ்வளவு தகடு தத்தங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றால் இந்த நாடு முழுவதும் என்னென்ன செய்வார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மற்றவற்றை கூட விட்டுவிடலாம். நமது அடிப்படை உரிமையான வாக்குரிமையை கூட நமக்கு தர மறுக்கும் ஒன்றிய அரசாக இது இருக்கிறது.

பா.ஜ.க. வாக இருக்கட்டும், அவர்களின் கையைப் பிடித்துக் கொண்டு இங்கே வலம் வருகிற அதிமுகவாக இருக்கட்டும்... அவர்களுக்கு என்றும் நாம் இடம் கொடுத்து விடக்கூடாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அ.தி.மு.க.வை துவங்கிய எம்.ஜி.ஆர். அவர்கள் மேடை தோறும் அண்ணாயிசம் என்று சொல்லுவார்கள். இன்றைக்கு அக்கட்சியின் தலைமை பொறுப்பை ஏற்று இருக்கக்கூடிய எடப்பாடி என்ன சொல்கிறார் என்றால், அமித்ஷா இசம், அமித்ஷா இசம் என்று சொல்கிறார்.

எதுவாக இருந்தாலும் எந்த பிரச்சினையாக இருந்தாலும் அவர்களுடைய அலுவலகத்தில் அமர்ந்து பேசி தீர்ப்பது இல்லை. அடுத்த பிளைட்டை பிடித்து நேராக டெல்லிக்குத்தான். அதிமுகவின் ஹெட் குவாட்டர்சை இப்போது டெல்லிக்கு மாற்றி விட்டார்கள். டெல்லிக்கு மாற்றி விட்டார்களா? அல்லது திரு அமித்ஷா எங்கே இருக்கிறாரோ அந்த இடத்துக்கு மாற்றி விட்டார்களா என்று தெரியவில்லை. அமித்ஷாவிடம் கேட்காமல் அதிமுகவில் யாரும் மூச்சு விடுவதில்லை... அவரைக் கேட்காமல் கட்சியில் ஒருவர் கூறுவர் பேசிக் கொள்வதுமில்லை.

டெல்லியில் இருந்து சொல்ல வேண்டும். நீங்கள் இருவரும் பேசிக் கொள்ளலாம் நீங்கள் இருவரும் பேசக்கூடாது என்று.

இப்படி ஒரு கட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார் எடப்பாடி. எந்த ஆட்சியில் மக்களின் உரிமைகள் எல்லாம் பறிக்கப்படுகிறதோ அவர்களுக்கு அடிபணிந்து அவர்களுக்கு கீழ்ப்பணிந்து கட்சியை அடகு வைத்துக் கொண்டிருக்கக் கூடியவர்கள் நமக்கு எதிராக வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். இதை தமிழக மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எந்த ஒரு காலகட்டத்திலும் இப்படிப்பட்ட சக்திகளுக்கு தமிழ் மண்ணிலே தமிழ்நாட்டிலே இடம் கொடுத்து விடக்கூடாது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நான்கு வருடமாக ஆளைக் காணோம். இப்போது தேர்தல் வருகிறது என்று ஒரு பஸ்ஸின் மீது ஏறிக் கொண்டு வந்துவிட்டார்.

நாம் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லையே என அடிக்கடி அவர் கேட்கிறார். எந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்று சொல்லுங்கள்.

கிட்டத்தட்ட ஒரு கோடியே 15 லட்சம் பேருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. விடியல் பயணம் என்று முதலமைசர் அவர்கள் அறிவித்தார்கள். கோடிக்கணக்கான பெண்கள் அந்தத் திட்டத்தால் பயன் பெறுகிறார்கள்.

**திராவிட மாடலின் திட்டங்கள்!**

கட்டணமில்லாத விடியல் பயணத்தால் ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு மாதமும் சுமார் 1000 ரூபாய் வரை சேமிக்கிறார்கள்.

புதுமைப்பெண் திட்டத்தில் நாலு லட்சத்து 83 ஆயிரம் மாணவிகள் பயன் பெறுகிறார்கள். கல்லூரி படிப்புக்கு செல்லாமல் இருந்துவிடக்கூடாது, உன் கல்லூரி செலவுக்கு வேண்டுவதை நான் தருகிறேன் என்று நம்முடைய முதலமைச்சர் தளபதி அவர்கள் தந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் புதல்வன் திட்டத்தின் வாயிலாக கிட்டத்தட்ட 3 லட்சத்து 86 ஆயிரம் மாணவர்கள் மாதம் ஆயிரம் ரூபாய் பலன் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

காலை உணவு திட்டம்... தேர்தல் வாக்குறுதியிலே காலை உணவு திட்டம் தருகிறேன் என்று சொல்லவில்லை. ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு யாரும் காலை உணவு வழங்க வேண்டும் என்று கேட்கவில்லை. ஆனால் நம் வீட்டுப் பிள்ளைகள் காலை உணவு சாப்பிடாமல் வந்து மதியம் வரை பள்ளியில் பசியோடு பட்டினியோடு இருந்து படிப்பில் கவனம் செலுத்த முடியாமல் போய் விடக்கூடாது என்பதற்காக இன்று 20 லட்சம் மாணவர்களுக்கு மேல் பயன்படக்கூடிய காலை உணவு திட்டத்தை வழங்கிக் கொண்டிருக்க கூடிய ஆட்சி நமது ஆட்சி.

108 ஆம்புலன்ஸ் கொண்டு வந்தது நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். இதற்கு அடுத்த கட்டமாக இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் 48... கோல்டன் ஹவர்ஸ் என்று சொல்லப்படுகிற விபத்து நடந்ததிலிருந்து 48 மணி நேரம் மிக முக்கியமானது என்பார்கள். அந்த வகையில் விபத்து நடந்த உடன் பக்கத்திலே இருக்கிற எந்த மருத்துவமனையில் கொண்டு போய் சேர்த்தாலும் கோல்டன் ஹவர்ஸ் எனப்படுகிற 48 மணி நேரத்துக்கு உண்டான சிகிச்சைக்கான செலவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்ற திட்டத்தை நிறைவேற்றி இருக்கக்கூடிய ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி.

இந்தத் திட்டத்தின் வாயிலாக மூன்று லட்சத்து 57 ஆயிரம் உயிர்களை காத்திருக்கக்கூடிய ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி.

இன்று தமிழ்நாடு முழுவதும் பத்தாயிரம் முகாம்கள் மருத்துவ முகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்று காலை என்னுடைய தொகுதியான தூத்துக்குடியில் மருத்துவ முகாமில் சென்று மக்களை சந்தித்து விட்டு வருகிறேன்.

வேறு எந்த மாநிலத்திலும், ஏன் வளர்ந்த நாடுகளில் கூட இல்லாத அளவுக்கு இப்படிப்பட்ட சிகிச்சைகள் கிடைக்குமா என கனவு காணக்கூடிய அளவுக்கு ... சாதாரண கிராமங்களில் இதய சிகிச்சை நிபுணர்கள் உட்பட அத்தனை சிறப்பு மருத்துவர் நிபுணர்களையும் பார்த்து அவர்களிடம் சிகிச்சை பெற முடியும் என்ற வகையில் இந்த மருத்துவ முகாம்களை நடத்திக் கொண்டிருப்பது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி.

**தமிழ்நாட்டை தலைகுனிய விடக் கூடாது!**

இப்படி ஒவ்வொரு நாளும் மக்களுக்கான திட்டங்கள், தொழில் முதலீடுகள், வேலை வாய்ப்புகள், உயர் கல்விக்கான புதிய திட்டங்கள், நான் முதல்வன் திட்டம் என்று ஒவ்வொரு நாளும் மக்களுக்கான திட்டங்களை தேர்தல் வாக்குறுதியாக இருக்கட்டும். புதிதான திட்டமாக இருக்கட்டும் அவற்றை செயல்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய நல்லாட்சி தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி.

தமிழர்களின் பெருமையை கீழடி ஆய்வறிக்கையை அவர்கள் வெளியிட கூட மறுக்கிறார்கள். இரும்புக்காலம் தமிழ்நாட்டில் தான் தொடங்கியது என்று நாம் கண்டுபிடித்து வெளியிட்டு இருக்கக்கூடிய ஆய்வறிக்கையை பற்றி ஒரு வார்த்தை இதுவரைக்கும் பிரதமர் வாய் திறக்கவில்லை. அதை அங்கீகரிக்கவில்லை.

தமிழர்களை மறுக்கக்கூடிய தமிழர்களின் பெருமைகளை தமிழ் மொழியை மறுக்கக் கூடியவர்களுக்கு இந்த மண்ணில் இடம் கொடுத்து விடக்கூடாது தமிழ்நாட்டை தலைகுனிய விட்டுவிடக்கூடாது என்ற உறுதியை இந்த மேடையிலே இங்கு இருக்கக்கூடிய அத்தனை பேரோடு நானும் எடுத்துக்கொள்கிறேன்.

இந்த நல்லாட்சியை தொடர வைக்க வேண்டும் என்ற சூளுரையோடு வேறு யாரும் தமிழ்நாட்டின் வளர்ச்சியை தடுத்து நிறுத்தி விட முடியாது என்ற அளவுக்கு தமிழ்நாட்டை ஓர் அரனாக நின்று பாதுகாப்போம்.

இனிமேல் தமிழர்களின் துரோகிகளுக்கு தமிழர்களின் இனமானத்தை கெடுக்கக் கூடியவர்களுக்கு இங்கே இடமில்லை இடமில்லை இடமில்லை. இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

இந்நிகழ்வில் அமைச்சர் மனோ தங்கராஜ், மேயர் மற்றும் மாவட்டச் செயலாளர் மகேஷ், முன்னாள் அமைச்சர் சுரேஷ் ராஜன், மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.